
# உழவர் ஓசை

அக்டோபர் - 2004 ஆண்டு - 1 இதழ் - 20 விலை ரூ. 10/-

முழுமையான, புதுமையான விவசாய மாத இதழ்



குழந்தை மக்கா...!

கிடைக்குது லாபம்!!




மூன்று மாதத்தில் 1 லட்சம்!!
எப்படி?

கடும் வறட்சியிலும்
விளையும் காட்டாமணக்கு



தக்காளிக்கு
விலை வேண்டுமா?



வான்கோழி
வளர்க்கலாம் வாங்க...!

வெணிலா விலை
கடும் வீழ்ச்சியா...?



முன்னாள் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



அழகுக்கு மட்டுமல்ல...!!
போன்சாய் வளர்த்து பாரு...

# காலிங்கராயன் கதை

## நூல் வெளியீட்டு விழா



5.9.2004 ஞாயிறு காலை 10 மணியளவில் ஈரோடு கொங்குகலை அரங்கில் ''காலிங்கராயன் கதை'' நூல் வெளியீட்டு விழா சிறப்பாக துவங்கியது. மத்திய அமைச்சர் திருமதி சுப்பு லட்சுமி ஜகதீஸ் அவர்கள் காலிங்கராயனின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்து அரியதோர் உரையாற்றினார்கள். 800 ஆண்டுகளுக்கு முன் காலிங்கராயன் அருமையான கால் வாய் ஒன்றினை 90 கி.மீ. தூரமும் வெட்டியதுடன் அன்றே கொங்க நாட்டுப் பெரு நதிகளான பவானி, நொய்யல், அமராவதி ஆகிய வற்றை இணைக்க எடுத்துக் கொண்ட பெருமுயற்சியினைப் பாராட்டினார்கள்.




நீதியரசர் திருசெங்கோட்டுவேலன் அவர்கள், சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் திரைப்பட நடிகர்கள் சத்யராஜ், சிவக்குமார், விஜய், கிருஷ்ணகாந்த் ஆகியோர் காலிங்கராயனின் வள்ளல் தன்மை பற்றியும் அவ் வள்ளலின் உள்ளத்தைக் கதை வடிவில் வெளிக் கொணர்ந்த நூலாசிரியர் திரு. பாஸ்கர தாசனையும் புகழ்ந்துரைத்தனர். கல்வெட்டறிஞர் புலவர் ராசு அவர்கள், கொங்கு கொளந்தசாமி அவர்கள் தோட்டக்கலை சங்க செயலா சிந்தாமணி பழனி சாமி ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். காலிங்க ராயனின் வம்சா வழியினரான பொள் ளாச்சி ஊத்துக்குளி ஜமீன் குடும்பத் தினரை அழைத்து வந்து சால்வைகள் அணிவித்து சிறப்புச் செய்தது. அரிய காட்சியாக அமைந்தது. எழுத்தாளர் பாஸ்கரதாசன் அவர்கள் ஏற்புரை கூற விழா இனிதே நிறைவேறியது.

உழவர் ஓசை ஆசிரியர் நித்தி யானந்தம் உள்ளிட்டப் பல வேறு துறை சார்ந்த பத்திரிகையாளர்களும் பெரு மக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.